தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மே 6, புதன்கிழமை.

சித்திரை 23, பிரபவ திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை''

இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகின்றவன் அறத்தின் இயல்பை உடைய மூவர்க்கும் நல்வழியில் நிலைபெற்ற துணையாவான்.

இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஆர். சிதம்பரபாரதி அவர்கள் 30-4-1987ம் தேதியன்றும், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. என். எஸ். வரதாச்சாரி 1-5-1987 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிதம்பரபாரதி அவர்கள் 1958 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. என். எஸ். வரதாச்சாரி அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையும் இருமுறை, சென்னை நகரம் தெற்கு பொது நகர்ப்புறத் தொகுதியிலிருந்து இருமுறை அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். திரு. இராஜாஜி அவர்கள்

அமைச்சரவையில் பேரவைச் செயலாளராகவும் (Parli mentary Secretary) சீரியமுறையில் பணியாற்றியுள்ளார். சென்னை மாநகராட்சி உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார், சுதந்திரப் போரில் ஈடுபட்டு மூன்று முறை சிறைத் தண்டனை பெற்றார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடுப்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும், இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிடாத வினாக்கள்.

இலவச வீட்டு மனைப்பட்டாவிற்கு வருமான வரம்பு.

607(*வினா எண். 10058) திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு நிதி ஆமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கான வருமான வரம்பு ரூ. 3,500 என்று இருப்பதை உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்காக ஆண்டு வருமான வரம்பு ரூ. 3,500 என்று இருப்பதை உயர்த்துவது குறித்து அரசு ஆய்வு செய்து மேற்படி வருமான வரம்பை உயர்த்தத் தேவையில்லை என்று முடிவெடுத்துள்ளது.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு ரூ. 3,500 என்று வரம்பு நிர்ணயிக்கப்பட்டு நீண்ட நாள் ஆகிறது. இப்பொழுது உயர்ந்திருக்கக்கூடிய விலைவாசியைக் கருதி, கடன் நிவாரணம வழங்குவதற்குக் கூட ரூ. 4,800 வரம்பாக நிர்ணயிக்கப்பட்டு, அந்த வருமானம் வரை உள்ளவர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்க அரசு சட்டம் இயற்றியுள்ளது. அதையெல்லாம் கணக்கில் கொண்டு, ரூ. 4,800 வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்குப் பட்டா வழங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.